தேதி:-06-10-2021 **Prob.O.P.No**.3/2018 ம.சா.2 (செந்தில்குமார்)

குறுக்குவிசாரணை:- (4, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் டாஸ்மார்க்கில் சூப்பர்வைசராக வேலை செய்கிறேன். இந்த வழக்கு மனுதாரர் ஞானசேகரனை எனக்கு 10, 12 வருடங்களாக தெரியும். ஞானசேகரின் தாயார் என்ற முறையில் காலஞ்சென்ற காசியம்மாளை எனக்குத் தெரியும். காசியம்மாளின் குழந்தைகள் எத்தனை பேர்கள் என்று தெரியும். அவர்கள் பற்றிய விபரங்கள் எனக்கு மேலோட்டமாக தெரியும். காசியம்மாளுக்கு நான்கு பெண்குழந்தைகள். அவர்கள் பெயர் எனக்குத் தெரியாது. காசியம்மாள் குடியிருந்து வீட்டின் கதவு எண்ணை சொல்ல முடியுமா என்றால், கதவு எண் தெரியாது. வீடு தெரியும். தெரு பெயர் தெரியுமா என்றால், பங்கஜம் காலனி என்று சொல்வார்கள். ஞானசேகரன் எனக்கு நண்பர், உறவினரல்ல. நான் காசியம்மாள் குடியிருந்த வீட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். உயில் எழுதப் போகிறேன், சாட்சி கையெழுத்து போட வேண்டுமென்று காசியம்மாள் என்னிடம் சொனனார். உயிலில் சாட்சி கையெழுத்து நான் போடுவதற்கு சுமார் 20, 25 நாட்களுக்கு முன்னர் என்னிடம் அவ்வாறு சொன்னார். ரைஸ்மில்லில் வைத்து அவ்வாறு சொன்னார். அந்த ரைஸ்மில் யாருக்கு பாத்தியம் என்று எனக்குத் தெரியாது. ரைஸ்மில்லுக்கு நான் மாவு அரைக்கப் போகும் போது அவர் சொன்னார். மாவு அரைக்கப் போன வகையில் காசியம்மாளுடன் எனக்குப் பழக்கம். 31.01.2018 க்கு முதல்நாள் என்னிடம் உயில் தயார செய்திருப்பதாகவும், சாட்சி கையெழுத்திட வரவேண்டுமென்று என்னிடம் காசியம்மாள் சொன்னார். 31 ஆம் தேதி நான் காசியம்மாள் வீட்டிற்கு காலை 10.30, 11.30 மணியளவில் சென்றேன். நான் போகும் போது அங்கு காசியம்மாள், ஒரு சாட்சி ரமேஷ், ஞானசேகரன், உறுதிமொழி ஆணையர் ஆகியோர் இருந்தார்கள். நான் போவதற்கு முன்பு உயில் தயார் செய்யப்பட்டிருந்தது, நான் போகும் போது காசியம்மாள் படித்துக் கொண்டிருந்தார். உயிலை யார்

தயார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. உயிலில் உள்ள விபரங்களை படித்துப் பார்த்துவிட்டீர்களா என்று நான் காசியம்மாளிடம் கேட்டேன். அதறகு அவர் ஆம் என்று சொல்லிவிட்டு கையெழுத்து செய்தார். காசியம்மாள் கையெழுத்து செய்த பின்னர் நான் முதலில் சாட்சி கையெழுத்து போட்டேன். கையெழுத்து அனைத்தையும் போட்டு முடித்த பின்னர் உயிலை காசியம்மாள் வைத்துக் கொண்டாரா அல்லது வேறு யாரிடமும் கொடுத்தாரா என்று எனக்குத் தெரியாது. கையெழுத்து செய்த வீட்டில் அப்போது காசியம்மாளுடன் ஞானசேகரன் குடியிருக்கவில்லை. ஞானசேகரன் வேறு வீட்டில் இருந்தார். காசியம்மாளுடன் குடியிருந்தது அவருடைய மகளும், மற்றொரு மகனா என்று எனக்குத் தெரியாது. நான் சொன்ன தேதியில் நான் அந்த வீட்டிற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 31.01.2018 ஆம் தேதி காசியம்மாள் எந்த உயிலும் எழுதவில்லை என்றும், அதில் நான் சாடசி கையெழுத்து போட்டதாக சொல்வது உண்மையில்லை என்று சொன்னால் சரியல்ல. 31.01.2018 க்கு பத்து மாதங்களுக்கு முன்பிருந்தே காசியம்மாள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வீட்டில் படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. 31.01.2018 ஆம் தேதி நான் கூறுவது போன்று வீட்டிற்கு ஞானசேகரன் மற்றும் உறுதிமொழி ஆணையர் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக பின்னிட்டு ம.சா.ஆ.4 உயில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் நண்பர் ஞானசேகரனுக்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.